செ.வெ.எண்:368 நாள்: 22.5.2020

**உரங்களை அதிக விலைக்கு விற்றால் நடவடிக்கை.**

**குறுவை பருவத்திற்கு தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் குறுவை பருவத்திற்கு தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக அனைத்து வட்டாரங்களிலும் மழை பெய்து வருகிறது. இம்மழையினை பயன்படுத்தி விவசாயிகள் குறுவை நெல் சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். கோடையில் நடவு செய்யப்பட்ட நெற்பயிரும் தற்போது மேலுரம் இடும் தருவாயில் உள்ளது.

இந்நிலையில் குறுவை பருவத்திற்குத் தேவையான உரங்கள் தனியார் மற்றும் கூட்டுறவு உர விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு தடையின்றி கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தற்போது மாவட்டத்தில் 1,554 மெட்ரிக் டன் யூரியா, 1,560 மெட்ரிக் டன் டி.ஏ.பி., 1,200 மெட்ரிக் டன் பொட்டாஷ் மற்றும் 3,985 மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் தனியார் மற்றும் கூட்டுறவு உர விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

உர விற்பனையாளர்கள் விற்பனை உரிமம் இன்றி உரம் விற்பனை செய்தால் உரக்கட்டுப்பாட்டு சட்டம் 1985ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மானிய விலையில் உள்ள உரங்களை விற்பனை முனையக் கருவி மூலம் மட்டும் விற்பனை செய்ய வேண்டும். உரங்களின் இருப்பு மற்றும் விலை விபரங்கள் அடங்கிய தகவல் பலகை விவசாயிகள் அறியும் வண்ணம் பராமரிக்க வேண்டும்.

உர மூட்டைகளில் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மிகாமல் உரங்களை விற்பனை செய்ய வேண்டும். விவசாயிகள் உரம் வாங்கும்போது உரிய ரசீது வழங்க வேண்டும். உர வரவு மற்றும் இருப்பு விவரங்கள் சரியாக பராமரிக்காமல் இருந்தால் உரக்கட்டுப்பாட்டு சட்டம் 1985 ன்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள் மண்வள அட்டையில் பரிந்துரைக்கப்பட்டவாறு உரங்களை வாங்கி பயன்படுத்த வேண்டும். இதனால் உரச்செலவை குறைக்கலாம். உரங்கள் விற்பனை முனையக் கருவி மூலம் விற்பனை செய்வதால் கட்டாயம் ஆதார் கார்டு கொண்டு செல்ல வேண்டும். உரம் வாங்கும் போது இரசீது தவறாமல் கேட்டு பெறவேண்டும். மேலும் உரம் வாங்க செல்லும் பொழுது அரசு அறிவித்துள்ள படி விவசாயிகள் சமூக இடைவெளி விட்டு சுயபாதுகாப்பு முறைகளான முககவசம் அணிதல், அடிக்கடி கைகழுவுதல் ஆகியவற்றை கடைபிடிக்க வேண்டும்.

மேலும் விவசாயிகள் உரம் குறித்த புகார்கள் இருப்பின் தங்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள உர ஆய்வாளரை தொடர்வு கொள்ளலாம் அல்லது வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக 04322 221666 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**